# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C.C–14–2024**

| LW.4 P.W.3 | | |
|---|---|---|
| Name: | ஸ்ரீதர் | Caste: |
| Father's Name: | வடமலை | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:44/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.06.2026

(எதிரிகள் ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது திருச்சி மாவட்டம், திருவறும்பூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கின் காவல்துறையில் பணிபுரிந்த வகையில் ஆய்வாளர் சுப்ரியா அவர்களின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். கடந்த 13.06.2021 அன்று 19.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் , மு.நி.கா. பால்ராஜ் மற்றும் காவல் ஆய்வாளர் சுப்ரியா ஆகியோர், புஷ்பவனம் மாரியம்மன் கோவில் பகுதிகளில் ரோந்து பணியில் கண்காணித்து வந்தபோது, சந்தேகப்படும்படியாக இரண்டு நபர்கள் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த வகையில் தேசிங்கு மற்றும் வீரமணி போலிசாரை கண்டதும், தப்பி ஓடி தலைமறைவாகிவிட்டார்கள். அவர்கள் நின்றிருந்த சோதனை செய்தபோது, 60 லி பிடிக்கக்கூடிய 2 பாலிதீன் பைகளில் 55 லி. வீதம், 110 லி. எரிசாராயம் இருந்தது.

அதன் அருகில் 2 பிளாஸ்டிக் கேனில் 95 லி. வீதம் எரிசாராயம் மண்ணில் புதைக்கப்பட்ட நிலையில் இருந்தது. அதனை முகர்ந்து பார்த்தபோது விஷ நெடியுடன் கூடிய வாடை வீசியதால், பொதுமக்கள் யாரும் சாட்சிகளாக முன் வராத காரணத்தினால், மேற்படி தடயப்பொருளை கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் உதவி ஆய்வாளர் சுப்பிரமணியன் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் பால்ராஜ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, கைப்பற்றினார்கள். மேற்படி தடயத்திலிருந்து, 750 மி.லி. பிடிக்கக்கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் 500 மி.லி.

வீதம் மாதிரிக்கு எடுத்து, SHO சீல் வைக்கப்பட்டது. எஞ்சிய தடயப்பொருட்கள் 32 TNP Act–படி மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திலேயே உடைத்து அழிக்கப்பட்டது. சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றிய தடயத்துடன் நிலையம் வந்து, குற்ற எண். 365/2021, 4(1)(aaa), 4(1)(g) r/w 4(1–A) TNP Act–படி தலைமறைவு குற்றவாளிகள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. மேற்படி **கைப்பற்றுதல் மகஜர், அழிப்பு மகஜர், முதல் தகவல் அறிக்கை முறையே அ.த.சா.5 முதல் 7–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பணி மாறுதல் காரணமாக ஆய்வாளர் சுப்ரியா என் பார்வைக்கு வழக்கு கோப்புகளை வைத்தார். நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, மேற்படி சாட்சிகளை விசாரணை செய்தேன். மேற்படி சாராயத்தை அருந்தி, உடலுக்கு பாதிப்பு ஏற்பட்டு யாரும் தனியார் மற்றும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறவில்லை என்பதாலும், எரிசாராயத்தை குடித்து யாருக்கும் பக்கவிளைவோ, உயிர்சேதமோ ஆகவில்லை என்பதாலும், இந்த வழக்கின் சட்டப்பிரிவை 4(1)(aaa), 4(1)(g) r/w 4(1–A) TNP Act–லிருந்து, 4(1)(aaa), 4(1)(g) TNP Act–ஆக மாற்றி சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்தேன். மேற்படி **சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.த.சா.8–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரிகளின் மீதான விசாரணையை முடித்து, கடந்த 15.08.2023 அன்று 4(1)(aaa), 4(1)(g) TNP Act–படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

இந்த வழக்கின் நேரடி புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தது, 2021. மேற்படி வழக்கின் புலன் விசாரணை முடித்து, குற்ற பத்திரிக்கையை 2023–இல் தாக்கல் செய்தேன். நான் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தபோது, மேற்படி வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்கள் காவல் நிலையத்தில் பணிபுரியவில்லை. சேகரிக்கப்பட்ட மாதிரிகள் பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டதா என்றால், இல்லை. புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

110 லி அளவுள்ள எரிசாராயம் அழித்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில், அவ்வாறு அழிக்கப்பட்டபோது ஏதேனும் புகைப்படம் எடுத்து தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. இவ்வழக்கில் போலிசார் சாட்சிகளை தவிர்த்து, தனி நபர் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றால் சரி. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 16.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**